பக்கங்கள்: ஆறு

— Registered as a Newspa[per]

# உதயன்

விலை ரூபா 6-00

சுடர் 11 வள்ளுவர் ஆண்டு 2026 மார்கழி 12 புதன்கிழமை (27-12-1995) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 31

# இராணுவ காவலரணை ஊடுருவி மாதகலில் புலிகள் திடீர்த் தாக்குதல்

## இராணுவச் சிப்பாய் ஒருவர் பலி

சாவகச்சேரி, டிசம்பர் 27

மாதகல் பகுதியில் ஸ்ரீலங்கா இராணுவ முன்னணி காவலரண்களை ஊடுருவிப், விடுதலைப் புலிகள் தாக்குதல் நடத்தியுள்ளனர் நேற்று முன்தினம் இரவு 11-00 மணியளவில் நடத்தப்பட்ட இத் திடீர்த் தாக்குதலில் இராணுவச் சிப்பாய் ஒருவர் கொல்லப்பட்டார் என்று தெரிவிக்கப்பட்டது.

இது தொடர்பாக மேலதிக விவரம் எதுவும் கிடைக்கவில்லை.

இதேசமயம் நேற்றுக் காலை 5-30 மணியளவில் வளலாய்ப் பகுதியில் நிலைகொண்டுள்ள படையினர் தொண்டமானாறு, கம்பர்மலைப் பகுதிகளை நோக்கி கடும் பீரங்கித் தாக்குதலை நடத்தினர் என்று தெரிவிக்கப்பட்டது.

விடுதலைப் புலிகள் மாதகலில் ஊடுருவித் தாக்கியதைப் பாதுகாப்பு வட்டாரங்கள் ஊர்ஜிதம் செய்தன. (இ-3-80)

## மட்டக்களப்பில் மீண்டும் தமிழர் கடத்தப்பட்டனர்

சாவகச்சேரி, டிச. 27

மட்டக்களப்பு உன்னிச்சைப் பகுதியில் ஊர்காவல் படையினரால் மீண்டும் 4 தமிழர்கள் கடத்திச் செல்லப்பட்டுள்ளனர்.

கடந்த 21 ஆம் திகதி இச் சம்பவம் இடம்பெற்றது.

கடந்த 17 ஆம் திகதியும் அப்பகுதியில் இருந்து 6 தமிழர்கள் கடத்திச் செல்லப்பட்டிருந்தனர்.

இவர்கள் அனைவரும் காடுகளில் மாடு மேய்க்கவும், விறகு வெட்டவும் சென்ற போது கடத்தப்பட்டவர்கள்.

உன்னிச்சையை அடுத்துள்ள மகாஓயா — மங்கள ஓயா குடியேற்றப் பகுதியில் உள்ள ஊர்காவல் படையினரே இந்த கடத்தல்களில் ஈடுபடுகின்றனர் என்று கூறப்படுகிறது. [இ-3]

## வன்னிப் பகுதியில் கூடுதல் மருத்துவ வசதிகள்

### செஞ்சிலுவைச் சங்கம் ஏற்பாடு

சாவகச்சேரி, டிச 27

வன்னிப்பகுதியில் உள்ள மக்களுக்கு கூடுதலான வைத்திய வசதிகளை அளிக்க செஞ்சிலுவைச்சங்க சர்வதேசக் குழு நடவடிக்கை எடுத்துள்ளது.

செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக்குழுவின் வைத்தியர் குழு, இலங்கை செஞ்சிலுவைச் சங்க வைத்தியர் குழு, வைத்திய மாணவர் குழு, என மூன்று பிரிவுகளை செஞ்சிலுவைச்சங்க சர்வதேசக் குழு வன்னிப் பகுதியில் செயற்படுத்த உள்ளது.

கூடுதலான மருந்து வகைகளை வன்னிப்பகுதிக்கு எடுத்து வரவும் —

வைத்திய சேவைக்காக வாகம் ஒன்றை வழங்கவும்— செஞ்சிலுவைச்சங்க சர்வதேசக்குழு நடவடிக்கை எடுத்துள்ளது. (இ-3)

## சந்தி வெளியில் கொல்லப்பட்டவர்களில் ஒருவர் லெப்டினன்ட்

சாவகச்சேரி, டிச. 27

மட்டக்களப்பு. சந்திவெளியில் விடுதலைப் புலிகளால் கொல்லப்பட்ட 34 படையினரில் ஒருவர் லெப்டினன்ட் டபிள்யூ டி. சுமணதாச என்று தெரிவிக்கப்படுகிறது.

லான் கோப்ரங்கள் ஏழுபேர், கோப்ரல்கள் நால்வர் மற்றும் சார்ஜன்ட் ஒருவர் கொல்லப்பட்டவர்களில் அடங்குவர்.

கொல்லப்பட்ட, காயமடைந்தவர்கள் சிங்க ரெஜிமன்டைச் சேர்ந்தவர்கள் என்றும் —தெரிவிக்கப்படுகிறது (இ-3)

# அரச ஊழியரின் சம்பளம், ஓய்வூதியம் தென்மராட்சியில் வழங்க இணக்கம்

### கொழும்புப் பத்திரிகை தகவல்

யாழ்ப்பாண அரச ஊழியர்களின் சம்பளம் மற்றும் ஒய்வூதியர்களின் கொடுப்பனவுகள் ஆகியவற்றை தென்மராட்சியில் வைத்து வழங்க ஜனாதிபதி இணங்கியுள்ளார் என்று சிங்களப் பத்திரிகை ஒன்று நேற்று செய்தி வெளியிட்டது.

யாழ்ப்பாணம் கைப்பற்றப்பட்ட பின் கடந்த 6 ஆம் திகதி தொலைக்காட்சியில் நாட்டு மக்களுக்கு உரையாற்றிய ஜனாதிபதி —

யாழ்ப்பாணத்தில் உள்ள அரச ஊழியர்கள் தமது சம்பளதை யாழ்ப்பாணத்தில் அல்லது வவுனியாவில் பெற வேண்டும் என்று தெரிவித்திருந்தார்.

அதன்பின் சம்பளம், ஒய்வூதியம் வழங்கத் தேவையான கட்டுநிதியை வழங்க திறைசேரி மறுத்திருந்தது.

இந்த விடயம் குறித்து ஜனாதிபதிக்கும், தமிழ்க் கட்சிகளுக்கும் இடையில் நடந்த பேச்சுக்களில் தென்மராட்சியில் வைத்து சம்பளம் மற்றும் ஓய்வூதியக் கொடுப்பனவுகளை வழங்க இணக்கம் ஏற்பட்டது என்று தெரிவிக்கப்பட்டது. (இ-3)

## திருமலையில் தாக்குதல் சிப்பாய் காயம்

கொழும்பு, டிச, 27

திருமலைக்கு தெற்கே சுமார் 30 கிலோ மீற்றர் தொலைவில் உள்ள சிற்றாறுப்பகுதியில் இராணுவத்தினர் மீது விடுதலைப்புலிகள் நேற்று தாக்குதல் ஒன்றை நடத்தினர்.

இத்தாக்குதலில் காயமடைந்த சிப்பாய் ஒருவர் திருகோணமலை கடற்படை ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார் என்று தெரிவிக்கப்பட்டது. (இ-3-6)

## திட்டமிட்ட தினம் ஹபரண தீவுப் பகுதிக்கு செல்லுமா?

### இன்னும் முடிவு இல்லை

சாவகச்சேரி, டிச. 27

திருகோணமலையில் இருந்து தீவுப்பகுதிக்கு பயணிகளை ஏற்றிச் செல்வதற்காக செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக்குழு நாளை மறுதினம் ஏற்பாடு செய்திருந்த சேவை நடைபெறுமா என்பது இன்னும் கோள்விக் குறியாகவே இருந்து வருகிறது.

கடந்த மூன்று மாதங்களாக தீவுப் பகுதிக்கு செல்ல முடியாத நிலையில் கொழும்பிலும் திருகோணமலையிலும் தரித்து நிற்கும் 300 க்கும் அதிகமானவர்களுக்கு பயண ஏற்பாடு செய்யும் வகையில், 'ஹபரண' கப்பலை சேவையில் ஈடுபடுத்த செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழு முன்வந்தது.

இந்தச் சேவையை நாளை மறுதினம் நடத்தவும் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

பயணிகளை காங்கேசன் துறையில் இறக்குவ்தா? அல்லது காரைநகரில் இறக்கு

(6 ஆம் பக்கம் பார்க்க)

# ராணுவ கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் சென்று பொருள்கள் திருட்டு!

## குருநகரைச் சேர்ந்த 7 பேர் கைது

சாவகச்சேரி, டிச. 27

இராணுவக் கட்டுப்பாட்டுப் பிரதேசத்துக்குள் சென்று பொருள்களைக் களவாடிய ஏழு பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என தமிழீழ காவல்துறை நிர்வாக உத்தியோகத்தர் விடுத்த செய்திக் குறிப்பு ஒன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தத் திருட்டுச் சம்பந்தமாக குருநகரைச் சேர்ந்த ஏழுபேர் காவல்துறையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவர்களிடமிருந்து சமையல் பாத்திரங்கள், அலுமினிய, பித்தளைப் பொருள்கள், சுடுதண்ணீர் போத்தல், உடுபுடைவைகள் என்பன மீட்கப்பட்டுள்ளன.

சந்தேக நபர்கள் தடுத்து வைக்கப்பட்டு விசாரணை செய்யப்பட்டு வருகின்றனர் என்றும் —

இந்தப் பொருள்களின் உரிமையாளர்களை காவல் துறையினர் இனங்கண்டுள்ளனர் என்றும் —

விசாரணையின் பின்னர் இப்பொருள்கள் உரிமையாளர்களிடம் ஒப்படைக்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டது. (இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மலிவு விற்பனை

அரிய சந்தர்ப்பத்தைத் தவற விடாதிர்கள்

ரவி அன் ராஜ் ஆடையகம்

இல. 77, பெரிய கடை, யாழ்ப்பாணம்
இல. 163, பிரதான வீதி, பருத்தித்துறை.

மகளிர் கோட்டம்

இல. 81, பெரிய கடை, யாழ்ப்பாணம்.
இல. 163, பிரதான வீதி, பருத்தித்துறை. (றஞ்சன் பூங்கா அருகில்)

(சி-2919)


சுன்னாகம் ப. நோ. கூ. சங்கம் (வ-து)

## அறிவித்தல்

### பணிப்பாளர் சபைக் கூட்டம்

மேற்படி கூட்டம் 30-12-95 ஆந் திகதி சனிக்கிழமை மு. ப. 10. 00 மணிக்கு சரசாலை வடக்கு ஸ்ரீ கணேச வித்தியாலயத்தில் நடைபெறும்.

முக்கிய விடயங்கள் ஆராயப்பட வேண்டி உள்ள தால் சகல பணிப்பாளர்களையும் தவறாது சமூகம் தருமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

செயலாளர்.

26. 12 95 (சி-3088)

## சைக்கிள் மாறிவிட்டது

25-12-95 அன்று நவீன சந்தை முன்பாக விடப் பட்ட லுமாலா பெண்கள் சைக்கிள் இல. 23932353 மாறி எடுக்கப்பட்டுள் ள து. அதே இடத்தில் வேறு லுமாலா பெண்கள் சைக்கிள் இருந்தது. மாறி எடுத்த வர் கீழ் உள்ள முகவரியில் உடன் தொடர்பு கொள்ள வும்.

நியூ செலக்ஸ்சன்
இல. 13, நவீன சந்தை,
சாவகச்சேரி.

(39695)

## முகம் அறியா உறவுக்கு

எமது

## கண்ணீர் அஞ்சலி

நாட்டினால் வேறுபடினும்
மொழியாலும் உணர்வாலும்
ஒன்றுபட்ட சகோதரனே
ஈழத்தமிழரின் துயர் கண்டு
நீ உன்னுயிரை தீ மூட்டி
போக்கிக் கொண்டாய்
எம் தமிழினத்துக்காக உயிர் நீத்த
அயல் நாட்டு சகோதரனுக்காய்
கண்ணீர் வடிக்கும்.

தென்மராட்சி வணிகர் மன்றங்களின்
ஒன்றியம்

39696)

## 31-ம் நாள் நினைவஞ்சலி



மலர்வு 04 — 04 — 1951

உதிர்வு 27 — 11 — 1995

அச்சுவேலி தம்பாலையைப் பிறப்பிடமாகவும் ஏழாலை, உடுப்பிட்டியை வசிப்பிடமாகவும் கொண்ட

அமரர்

### கணபதிப்பிள்ளை தில்லைநடராஜா

(சந்திரன்)

அன்பின் திருவுருவாய் பண்பின் பிறப்பிடமாய்
பாசத்தின் சிகரமாய் வாழ்ந்து எங்கள்
அனைவருக்கும் நல்வழி காட்டிய தெய்வமே
நீங்கள் எங்களைப் பிரிந்து ஓர் திங்கள் ஆனாலும்
உங்கள் நினைவும், பாசமும் என்றும்
எங்களை விட்டு அகலாது
உங்கள் ஆத்மா சாந்தி அடைய எல்லாம்
வல்ல ஆண்டவனைப் பிரார்த்திக்கிறோம்.

சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

மனைவி, பிள்ளைகள்,
சகோதரர்கள்

உடுப்பிட்டி. (39585)

## பன்றித் தலைச்சி கொடியேற்றம்

சாவகச்சேரி, டிச. 27

சரித்திரப் பிரசித்தி பெற்ற மட்டுவில் பன்றித் தலைச்சி கண்ணகை அம்மன் ஆலய கொடியேற்றத் திருவிழா இன்று நண்பகல் 12 மணிக்கு நடைபெறவுள்ளது.

தேர்த் திருவிழா எதிர்வரும் ஜனவரி 4 ஆம் திகதியும் தீர்த் தோற்சவம் மறுநாளும் நடை பெறவுள்ளன. (அ-31)

## திருவெம்பாவை

சாவகச்சேரி, டிச. 27

திருவெம்பாவை இன்று ஆரம்பமாகிறது. தென்மராட்சி, வடமராட்சி, வன்னிப் பெருநிலப் பரப்பில் உள்ள பல ஆலயங்களிலும் இன்று தொடக்கம் திருவெம்பாவை விசேட பூசைகளும் வீதிப் பஜனைகளும் நடைபெறும். (அ)

## மாஹோவில் சவர்க்காரம் ம. எண்ணெய்

சாவகச்சேரி, டிச. 27

5 ஆயிரம் பரல் மண்ணெண்ணெய் மற்றும் சவர்க்காரத்துடன் 'மாஹோ' கப்பல் இன்று பருத்தித்துறைக்கு வந்து சேர விருக்கிறது.

நேற்று மாலை திருகோணமலையில் இருந்து இக்கப்பல் புறப்பட்டதாகவும் —

இன்று பருத்தித்துறைக்கு வந்து சேரும் என்றும் — தெரிவிக்கப்பட்டது. (இ-3)

## நலன்புரிசங்க வைத்திய சிகிச்சைகள்

சாவகச்சேரி, டிச. 27

நோயாளர் நலன்புரிச் சங்கத்தினால் நடத்தப்பட்டு வந்த காது, மூக்கு, தொண்டைக்கான சிகிச்சைகள் இன்று புதன்கிழமை முதல் புலோலி மெதடிஸ்த பாடசாலையில் நடைபெறும்.

வாரத்தில் சனிக்கிழமைகளில் பாடசாலை மாணவர்களும் திங்கள், புதன், வெள்ளி ஆகிய நாட்களில் ஏனையோரும் இந்தச் சிகிச்சைகளைப் பெற்றுக் கொள்ளலாம் என்று தெரிவிக்கப்படுகிறது. (ஐ-7)

## பரீட்சை அனுமதி அட்டை

சாவகச்சேரி, டிச. 27

பலாலி, கோப்பாய் ஆசிரிய பயிற்சிக் கல்லூரியில் இறுதி ஆண்டுப்பரீட்சைக்கும் —

அரசாங்க மாகாண எழுதுநர் சேவையின் தரம் இரண்டின் 'ஆ' பிரிவுக்கான பரீட்சைக்கும் — அனுமதி அட்டை பரீட்சைத் திணைக்களத்தினால் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

ஆசிரியர் பயிற்சியினை முடித்து இறுதி ஆண்டுப் பரீட்சைக்குத் தோற்றவுள்ள ஆசிரியர்கள் அவர்களுக்கான அனுமதி அட்டைகளை அவர்களது அதிபர்களைச் சந்தித்து பெற்றுக் கொள்வதுடன் போக்குவரத்து ஒழுங்குகளை செய்துகொள்ளுமாறும் —

எழுதுநர் சேவையின் தரம் இரண்டு 'ஆ' பிரிவுக்கான பரீட்சைக்குத் தோற்றவுள்ளோர் அவர்களுக்கான அனுமதிஅட்டைகளை கிளிநொச்சி கல்வித் திணைக்களத்தில் பெற்றுக் கொள்ளுமாறும் — வலயம் ஒன்றின் கல்விப் பணிப்பாளர் திரு. இ. சிவானந்தன் அறிவித்துள்ளார். (இ-7)

## மருத்துவ ஆய்வு

தென்மராட்சி, டிச. 27

சாவகச்சேரி பகுதியில் உள்ள இடம் பெயர்ந்த மக்களின் சுகாதாரம், வதிவிட வசதி, உணவு போசாக்கு ஆகியன பற்றி செஞ்சிலைவச் [illegible] ஆய்வு ஒன்றை மேற்கொள்ளவுள்ளது. (இ-17)


அஜந்தாஸ் ஸ்ருடியோ
உடன் தேவைக்கு படம் பிடிக்க

## அஜந்தாஸ் ஸ்ருடியோ

பரு. — யாழ். பிரதான வீதியில்
மாலுசந்திக்கு அண்மையில்
(யாழ். செயலகத்தின் அருகாமையில்)

அடையாள அட்டை, பாஸ்போட், படம் பெரிதாக்கிக் கொள்ள, மற்றும் கலர்ப் படங்கள் என்பன எமது சேவையில் உள்ளன.

(சி-3091)

## கணேசன் பட்டுச்சோலை

இறக்குமதி செய்யப்பட்ட ஆண்களுக்கான
★ சேட்டிங்ஸ் ★ T- சேட்ஸ்
பெண்களுக்கான
★ ஸ்கேட் & பிளவுஸ், ★ சாறி வகைகள்
★ பிளவுஸ் துணிகள் போன்றவற்றுக்கு

## கணேசன் பட்டுச்சோலை

இல. 14, நவீன சந்தை, மேல்மாடி,
(39699) சாவகச்சேரி.


## கண்ணீர் அஞ்சலி

### எஸ். பத்மநாதன் சிவலிங்கம்

(S. P, S. ரான்ஸ்போட் உரிமையாளர்)

எமது நீண்ட கால நண்பராகிய பத்மநாதன் சிவலிங்கம் கடந்த சனிக்கிழமை இந்தியாவிலுள்ள அப்பலோ வைத்திய சாலையில் காலமாகி விட்டார்.

அன்னாரது மறைவால் ஆறாத் துயரில் தவிக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தினை தெரிவித்துக் கொள்கிறோம்.

விஜயன்ஸ் ரான்ஸ்போட்
ஸ்தாபனத்தார்.

சரசாலை,
சாவகச்சேரி. (39600)


## மேர்ச்சன்ட் பினான்ஸ் லிமிட்டெட்.

## MERCHANT FINANCE LIMITED

(555, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.)

தற்காலிகமான அலுவலகம் ஒன்று பருத்தித்துறை சாரையடியில் திறக்கப்பட்டுள்ளது.

பல காரணங்களினால் தேவையான ஆவணங்கள் முதலியன யாழ்ப்பாணத்திலேயே சிக்கியுள்ளதுடன் தற்போது பாவனைக்கு இல்லாமலுள்ளன.

### தற்போதைய செயற்பாடுகள்

### வட்டி கொடுப்பனவுகள்

அ) காசாக வழங்கப்பட்ட மாதாந்த வட்டி

வாடிக்கையாளரின் நன்மை கருதி இந்தக் கொடுப்பனவு காலாண்டிற் கொருமுறை முற்பணமாக காசோலையாக வழங்கப்படும்.

ஆ) வங்கி கணக்குகளுக்கு வரவு வைக்க அனுப்பப்படும் மாதாந்த வட்டி

வாடிக்கையாளர்கள் தங்களது வைப்புகள் சம்பந்தமான விவரங்கள், இறுதியாக எம்மால் வங்கிக்கு வரவு வைக்கும்படி அனுப்பப்பட்ட கடிதத்தின் தங்களது பிரதி இவற்றுடன் எம்முடன் தயவு செய்து தொடர்பு கொள்ளவும்.

இ) வருடாந்த வட்டி

வாடிக்கையாளர்கள் தங்களது வைப்புகள் சம்பந்தமான விவரங்களுடனும், முதிர்வு திகதியுடனும் எம்முடன் தயவு செய்து தொடர்பு கொள்ளவும். கொடுப்பனவுகள் காசோலையாகவே உங்கள் அறிவுறுத்தலின்படி வழங்கப்படும்.

### வைப்புகள் மீளளிப்பு

வழமைபோல் தேவையான ஆவணங்களை சமர்ப்பிப்பதன் மூலம் மீளளிப்புகள் பெற்றுக் கொள்ளலாம்.

### வாடகை கொள்வனவும், வாடிக்கையாளர்களும்

இரு தரப்பினரது சௌகரியமும் நன்மையும் கருதி தயவு செய்து உங்களது இறுதியாக செலுத்திப் பெற்றுக்கொண்ட பற்றுச் சீட்டைக் கொண்டு வந்து காண்பித்து நிலுவைகளை ஒழுங்காக செலுத்துங்கள்.

அ. சோமசுந்தரம்பிள்ளை
முகாமைத்துவ இயக்குனர்.

20-12-95 (சி-3063)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தெற்கில் இருந்து கிழக்குக்கு மேலதிகபடையினர் விரைவு!

## பெரும் இராணுவ நடவடிக்கைக்கு முஸ்தீபு

கொழும்பு, டிச. 27

கிழக்கு மாகாணத்தில் விடுதலைப் புலிகளின் கை ஓங்கி வருவதை அடுத்து அங்கு மேலதிக துருப்பினர் தென் பகுதியில் இருந்து நகர்த்தப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கிழக்கில் திரண்டுவரும் விடுதலைப் புலிகளை ஒடுக்குவதற்காக தற்போது மட்டக்களப்பு மாவட்டத்தில் ஆங்காங்கே மட்டுப்படுத்தப்பட்ட இராணுவ நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

விடுதலைப் புலிகளுக்கு எதிராகப் பாரிய இராணுவ நடவடிக்கை ஒன்றை அங்கு உடனடியாக மேற்கொள்ள போதிய படைப்பலம் தற்போது அரசிடம் இல்லை.

எனினும் கிழக்கில் பாரிய இராணுவ நடவடிக்கைகளை மேற்கொள்ளத் திட்டமிடப்பட்டு வருவதாக பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இதற்கான ஆயத்தங்களையும் படையினர் தற்போது துரிதமாகமேரகொண்டு வருகின்றனர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

பாரிய இராணுவ நடவடிக்கைக்கு முன்னோடியாக அங்கு மேலதிக துருப்பினர் தென்பகுதியில் இருந்து நகர்த்தப்பட்டு வருகின்றனர் — என்று கொழும்பு பத்திரிகை ஒன்று தெரிவித்துள்ளது.

இதேவேளை —

படையினருக்குத் தேவையான ஆயுதங்களை ஏற்றிக் கொண்டு பாகிஸ்தானில் இருந்து கப்பல் ஒன்று எந்த நேரத்திலும் கொழும்பு துறைமுகத்தை வந்தடைய இருப்பதாக இராணுவ வட்டாரங்களில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. (ஐ)

## மட்டக்களப்பில் குண்டுகள் கண்டுபிடிப்பாம்

கொழும்பு, டிச. 27

இராணுவ நிபுணர்கள் மட்டக்களப்பில் இரு குண்டுகளை செயலிழக்கச் செய்திருப்பதாக பாதுகாப்பு அமைச்சின் நடவடிக்கைத் தலைமையகம் தெரிவித்துள்ளது.

மக்கள் நெருக்கமாக வசிக்கும் ஒழுங்கை ஒன்றினுள் இவை காணப்பட்டன என்றும் —

அது பற்றிய இரகசிய தகவல் கிடைத்ததும் அவை செயலிழக்கச் செய்யப்பட்டன என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

## கிழக்கு மாகாணத்தில் விரைவில் மூன்று இராணுவ நடவடிக்கைகள்

கொழும்பு, டிச. 27

கிழக்கில் விடுதலைப் புலிகளின் நடவடிக்கைகளை முறியடிக்க விரைவில் மூன்று இராணுவ நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட இருப்பதாக உயர் இராணுவ அதிகாரி ஒருவர் தெரிவித்திருப்பதாக ''ஞாயிறு திவயின'' பத்திரிகை செய்தி வெளியிட்டிருக்கிறது.

மூன்று இடங்களில் இந்த இராணுவ நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்றும் —

இதற்கான முன்னேற்பாடுகளில் விசேட பொலீஸ் அதிரடிப் படையினரும், இராணுவத்தினரும், விமானப் படையினரும், பொலீஸாரும் கூட்டாக ஈடுபட்டிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இந்த இராணுவ நடவடிக்கைகளுக்குத் தேவையான அனைத்து ஆயுத தளபாடங்களும் ஏற்கனவே வழங்கப்பட்டிருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. (ஐ-10)

## பூநகரியில் குடிசைகள் அமைக்கக் காணி

பூநகரி, டிச. 27

கிராஞ்சி பாடசாலையில் தங்கியுள்ள 45 இடம் பெயர்ந்த குடும்பங்களைப் பிருந்தாவனத்தில் குடியமர்த்துவதற்கு தமிழர் புனர்வாழ்வுக் கழகம் நடவடிக்கை மேற்கொண்டுள்ளது.

இதன் ஆரம்ப கட்டமாக ஒவ்வொரு குடும்பத்துக்கும் முக்கால் ஏக்கர் காணி சிரமதானத்தின் மூலம் அண்மையில் துப்பரவு செய்யப்பட்டது.

## கடற்படைக்கு விரைவில் இரண்டு போர்க் கப்பல்கள்

கொழும்பு, டிச. 27

கடற்படைக்கு இரண்டு போர்க் கப்பல்களைக் கொள்வனவு செய்வது தொடர்பாக கடற்படை உயர்மட்டக் குழு ஒன்று ரஷ்யா சென்றுள்ளது.

அவசரமாக இவ்விரு கப்பல்களையும் கொள்வனவு செய்வதில் அக் குழுவினர் ஈடுபட்டிருப்பதாக செய்திகள் வெளியாகியுள்ளன.

கொள்வனவு செய்யத் தெரிவு செய்யப்பட்ட கப்பலை பரீட்சார்த்தமாக இயக்கிப் பார்க்கும் நடவடிக்கை ரஷ்யாவில் கடும் உறைபனி மற்றும் காலநிலை சீரின்மையால் தாமதமாகியுள்ளதாக கடற்படை அதிகாரி ஒருவர் தெரிவித்திருக்கிறார். (ஐ-3)

## வாகனத்தில் கடத்த முயன்ற தடை செய்த பொருள்கள் கைப்பற்றப்பட்டனவாம்

வவுனியா பம்மை மடுவில் இருந்து மன்னார் வழியாக பாதுகாப்பு படையினரின் கட்டுப்பாட்டில் இல்லாத பகுதிக்கு தடை செய்யப்பட்ட பொருள்களைக் கடத்திச் செல்ல எடுக்கப்பட்ட முயற்சி முறியடிக்கப்பட்டதாகப் பொலீஸார் தெரிவித்துள்ளனர்.

சுமார் 15 லட்சம் ரூபா பெறுமதியான பொருள்கள் வாகனம் ஒன்றில் ஏற்றப்பட்டு எடுத்துச் செல்லப்பட்ட போது பம்பைமடு காட்டுப் பிரதேசப் பகுதியில் பாதுகாப்புப் படையினரால் கைப்பற்றப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. மூவர் கைது செய்யப்பட்டனர்.

சில வாரங்களுக்கு முன்னர் இதே பிரதேசத்தில் கைவிடப்பட்ட ''பங்கர்'' ஒன்றுக்குள் இருந்து சுமார் 15 லட்சம் ரூபா பெறுமதியான தடை செய்யப்பட்ட பொருள்கள் கண்டு பிடிக்கப்பட்டிருந்தன. (ஐ-3)

## சிங்கள ஆதிபத்திய உருவாக்கமே இனப்பிரச்சினைக்கு மூல காரணம்

### வாசுதேவ கூறுகிறார்

கொழும்பு, டிச. 27

இனப்பிரச்சினைக்கு மூல காரணம் வடக்கு கிழக்கில் சிங்கள ஆதிபத்தியத்தை உருவாக்க முயன்றதேயாகும். அரசாங்கம் யுத்தத்தில் சில வினாடிகள் வெற்றி பெற்ற போதிலும் மீண்டும் அதே தவறையே செய்துள்ளது.

இரத்தினபுரி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் வாசுதேவ நாணயக்கார இவ்வாறு தெரிவித்தார்.

கொழும்பு பொது நூல் நிலையத்தில் அண்மையில் நடைபெற்ற போருக்கு எதிரான கருத்தரங்கில் தலைமை வகித்து உரையாற்றிய போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

இன்று இந்த நாட்டில் இனவாத, யுத்தவாதப் பின்னணிகளே உருவாகியுள்ளன. தனியார் தொடர்பு சாதனங்கள் மட்டுமன்றி அரச தொடர்பு சாதனங்களும் இவற்றிற்கு அடிமையாகியுள்ளன. சமாதானம் தேண்டாம்; யுத்தமே வேண்டும் என்று கூறும்போது நாங்கள் ஒன்றை அறிந்து கொள்ள வேண்டும்.

இனி கட்சிகள் வேண்டாம்; நாடாளுமன்றம் வேண்டாம்; தொழிற்சங்கங்கள் வேண்டாம்; ஜனநாயகம் வேண்டாம்; இராணுவ ஆட்சியே நல்லது என்று கூறி ஊர்வலங்கள் நடத்தப்படவும் கூடும்.

சிங்களவர்கள் என்ற ரீதியில் சகல சிங்களவர்களும் ஓரணி திரள வேண்டும் என தற்போது கூறப்பட்டு வருகிறது.

தங்களது பிரதேசங்களைத் தாங்களே நிர்வகிக்க வேண்டும் என்ற நிலைப்பாட்டிலேயே நாங்கள் உள்ளோம். எனவே இனப் பிரச்சினைக்கு அரசியல் தீர்வு மாத்திரமே ஒரே ஒரு வழியாகும் — என்றார். (ஐ-10)

### தேர்தல் காலத்தில் நடந்த ராணுவ சதிப்புரட்சி முயற்சி!

## ஐ. தே. கட்சி எம். பிக்கள் மற்றும் சிசில், லக்கி அல்கம ஆணைக்குழு முன்

கடந்த நாடாளுமன்றத் தேர்தல் காலத்தில் இடம் பெற்றதாகக் கூறப்படும் இராணுவச் சதிப்புரட்சி முயற்சி குறித்து விசாரித்து வரும் விசேட ஜனாதிபதி ஆணைக்குழு மூன்று ஐ.தே.க. நாடாளுமன்ற உறுப்பினர்கள், முன்னாள் இராணுவத் தளபதி ஆகியோரை ஆணைக்குழு முன் ஆஜராகும்படி உத்தரவிட்டிருக்கின்றது.

ஐ. தே. கவின் எம். பிக்களான ஏ. ஸி. எஸ். ஸமீத், ஜெயலத் ஜெயவர்த்தனா, வஜிரா அபேவர்த்தனா, முன்னாள் இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் சிசில் வைத்தியரத்ன, முன்னாள் இராணுவ தலைமை அதிகாரி மேஜர் ஜெனரல் லக்கி அல்கம, முன்னாள் சட்டமா அதிபர் திலக் மாரப்பான, வெளிவிவகார அமைச்சின் செயலாளர் றொட்னி வண்டர்கேட் ஆகியோர் உட்பட 18 முக்கிய பிரமுகர்களே எதிர்வரும் சனியன்று ஆணைக்குழு முன் ஆஜராகும்படி கேட்கப்பட்டிருககின்றனர். (உ)

### இடம்பெயர்ந்தோருக்கு

## வன்னியில் இதுவரை 114 முகாம்கள்

கொழும்பு, டிச. 27

இடம் பெயர்ந்தவர்களில் 10 ஆயிரம் குடும்பங்களைச் சேர்ந்த 40 ஆயிரம் பேருக்கு அதிகமானோரை 114 நலன்புரி நிலையங்களில் வைத்து பராமரித்து வருகின்றோம். இது தவிர-நலன் புரி நிலையங்களுக்கு அப்பால் உறவினர்கள், நண்பர்களுடன் 62 ஆயிரம் குடும்பங்களைச்சேர்ந்த இரண்டரை லட்சம் பேருக்கு மேல் தங்கியுள்ளனர்.

மொத்தத்தில் 72 ஆயிரம் குடும்பங்களைச் சேர்ந்த 3 லட்சம் பேர் வன்னிக்கு வந்துள்ளார்கள்.

மேற்கண்ட தகவலை கிளிநொச்சி அரச அதிபர் திரு. எஸ். தில்லைநடராசா தெரிவித்தார்.

இடம் பெயர்ந்து வந்துள்ளவர்களுக்கு உலர் உணவு நிவாரணம் அரசாங்கத்தால் வழங்கப்பட்டுவருகிறது.

பல தொண்டர் நிறுவனங்கள் உணவு தவிர்ந்த ஏனைய பொருள்களை அனுப்பி வருகின்றன.

அலுமினியம், கல்வனைஸ் வாளி, சீனச்சட்டியில் செய்யப்பட்ட கேத்தில், சமையல் பாத்திரங்கள் ஆகியவற்றை இங்கு எடுத்து வருவதற்கு பாதுகாப்பு அமைச்சிடம் அனுமதி பெற வேண்டும் என்றும் அவர் கூறினார். (இ-3)

## இ. தொ. கா. - ஜனாதிபதி சந்திப்பு இறுதி நேரத்தில் ஒத்திவைப்பு

கடந்த வியாழக்கிழமை ஜனாதிபதி சந்திரிகாவுக்கும், இ. தொ. கா. தூதுக்குழுவுக்கும் இடையில் நடைபெற ஏற்பாடாகி இருந்த சந்திப்பு இறுதி நேரத்தில் ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

அன்று காலை 9.30மணிக்கு இந்தச் சந்திப்பு நடைபெற ஏற்பாடாகியிருந்தது.

அதன்படி இ. தொ. கா. தலைவரும், அமைச்சருமான எஸ். தொண்டமான் தலைமையிலான தூதுக்குழுவினர் அலரி மாளிகைக்குச் சென்றனர்.

ஆனால் அன்று மாலை 4.30 மணிக்கே சந்திப்பு இடம் பெறும் என தெரிவிக்கப்பட்டதாம்.

பின்னர் சந்திப்பு அடுத்த மாதம் முதல் வாரத்துக்கு ஒத்திப்போடப்பட்டுள்ளதாக தொலைபேசி மூலம் ஜனாதிபதி செயலகத்தால் அறிவிக்கப்பட்டதாக இ. தொ. கா. வட்டாரங்கள் தெரிவித்தன.

அதேவேளை — முன்னர் திட்டமிட்டபடி தமிழர் விடுதலைக் கூட்டணி, புளொட் அமைப்புக்களுடனான சந்திப்புக்கள் இடம்பெற்றதை [illegible]

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# சின்னஞ் சிறு விளம்பரம்

### தேவை

றபர் முத்திரை (Rubber Stamp) செய்வதில் அனுபவமுள்ளவர்கள் (ஆண்) உடன் தேவை. தொடர்பு கொள்ள வேண்டியமுகவரி: சோதி அச்சகம், கச்சாய் வீதி (மக்கள் கடை அருகில்), சாவகச்சேரி.

(39690)

## பொது இணறுகளுக்கு வாளிகள்

பருத்தித்துறை பிரதேச சபையினால் பராமரிக்கப் பட்டுவரும் 20 பொதுக்கிணறுகளுக்கு, பருத்தித்துறை பிரதேச சபையினால் வாளிகள் வழங்கப்பட்டுள்ளன.

## சிப்பாய் காயம்

கிழக்கில் சித்தாறு என்ற இடத்தில் விடுதலைப் புலிகளுடன் இடம்பெற்ற மோதலில் சிப்பாய் ஒருவர் காயமடைந்தார். அவர் திருமலை கடற்படை ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டதாகப் பாதுகாப்பு அமைச்சின் நடவடிக்கைத் தலைமையகம் தெரிவித்தது. (ஐ)

## கீரை விதைக்கு பெரும்தட்டுப்பாடு

கீரை விதையின் விலை கொத்து ஆயிரம் ரூபாவாக உயர்ந்துள்ளது.

கீரையின் விலை திடீரென அதிகரித்திருப்பதும், கீரை விதைக்கு ஏற்பட்டுள்ள தட்டுப் பாடுமே இந்த விலை அதிகரிப்புக்குக் காரணமாகும்.

சந்தையில் ஒரு பிடி கீரை 20 ரூபாய் வரை விற்பனையாகிறது.

வலிகாமத்தில் இருந்து வெளியேறிய விவசாயிகள் பலர் தாம் சேமித்து வைத்த கீரை விதைகளை அங்கேயே கைவிட்டு வர நேர்ந்துள்ளது. (ஐ-154)

## பருத்தித்துறை கோட்ட ஆசிரியருக்கு

பருத்தித்துறை கல்விக் கோட்டத்தைச் சேர்ந்த அதிபர்கள், ஆசிரியர்களை இன்றும் நாளை வியாழக்கிழமையும் தத்தமது பாடசாலைகளுக்குச் சமூகமளிக்குமாறு கோட்டப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் கேட்டுள்ளார்.

பாடசாலை அமுலாக்கம் தொடர்பான கடமைகளை செய்து முடிப்பதற்காகவே இவர்கள் அழைக்கப்பட்டுள்ளனர். (ஐ-173)

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை.

கலைப்பீடம்

### ஆய்வுக்கட்டுரை

யாழ். பல்கலைக்கழகத்தில் சிறப்புக் கலைப் பகுதி III, வர்த்தகமாணி பகுதி III, வியாபார நிர்வாகப் பகுதி III, புவியியலை ஒரு பாடமாக எடுக்கும் பொதுக் கலைப் பகுதி II, பட்டப் பின் படிப்பு கல்வி டிப்புளோமா பகுதி II, முழு நேரம் ஆகிய பரீட்சைகளை எழுதவுள்ள மாணவர்கள் வழமை போல் ஆய்வுக் கட்டுரைகளை சமர்ப்பிக்க வேண்டும்.

பதிவாளர்

(சி-2920)

## நவீல்ட் பாடசாலை ஆரம்பம்

கைதடி நவீல்ட் செவிப்புலன், விழிப்புலன் இழந்தோர் பாடசாலை புதிய ஆண்டுக்காக 01-01-1996 (திங்கட்கிழமை) ஆரம்பமாகும். சகல மாணவர்களும், ஆசிரியர்களும், ஊழியர்களும் அன்று பாடசாலைக்குச் சமுகந் தருமாறு வேண்டப்படுகின்றனர்.

புதிய மாணவர்களின் அனுமதியும் அன்று நடைபெறும்

(3086) அதிபர்

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

தோற்றம்: 10 — 10 — 1917



மறைவு: 27 — 11 — 1995

### அமரர் கதிரவேலு ஆறுமுகம்

(புங்குடுதீவு — 5)

அன்பின் திருவுருவாய் பண்பின் பிறப்பிடமாய்
பாசத்தின் சிகரமாய் வாழ்ந்து
எங்கள் அனைவருக்கும் வழிகாட்டிய தெய்வமே
நீங்கள் எங்களை விட்டு பிரிந்து மாதம் ஒன்று ஆனாலும்,
உங்கள் நினைவும் பாசமும் எங்களை விட்டு அகலாது.

அன்னாரின் மீளாத் துயரில் கலந்து கொண்டும் இறுதிக் கிரியைகளில் பங்கு கொண்டும், அனுதாபம் தெரிவித்தும் பல்வேறு உதவிகள் புரிந்த உற்றார் உறவினர், நண்பர்களுக்கும் தற்போதைய அவலநிலையிலும் வைத்திய உதவிகள் புரிந்த Modern, Hospital Doctor ஆ. பேரின்பநாதன் அவர்களுக்கும் கல்வயல், குகநேசன் குடும்பத்தாருக்கும், அயலவர்கள் அனைவருக்கும் எமது நன்றியை தெரிவிப்பதுடன் (27-12-95) இன்று உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

நீங்காத நினைவுகளுடன் வாழும்
**மனைவி, மக்கள்,**
**மருமக்கள், பேரப்பிள்ளைகள்.**

தற்காலிக முகவரி
ஆ. சாந்தரலிங்கம் (மகன்)
1 ஆம் கட்டை,
பெருங்குளம் றோட்,
கல்வயல்,
சாவகச்சேரி.

(39596)


நத்தார் புதுவருட மலிவு விற்பனை

இன்று முதல் கொடிகாமம் நவீன சந்தையில் மற்றுமோர் ஸ்தாபனம்

கோபிகா ஆடை அகம்

(ராகமாளிகா)

இல- 3, நவீன சந்தை, கொடிகாமம்.

சகல விதமான புடைவை வகைகளுக்கும் பெயர்பெற்ற ஸ்தாபனம்

[சி-3069]


## 60 ஆம் நாள் நீங்கா நினைவலைகள்



### செல்வன் வீரகத்தி ஜெயறூபன்

மண்ணில்: 9 - 8 - 1972

விண்ணில்: 29 - 10 - 1995

எம் இதயக் கோயிலே! றூபன் நீ
எங்குதான் மறைந்தனையோ? றூபன் – உன்
எழிலான வதனத்தைத் தேடி நிற்கின்றோம் - உன்
குறும்புச் செயலை எண்ணி வாடிக்
கிடக்கின்றோம்

எம் கண்ணுக்குள் நின்று நீ சிரிக்கின்றாய்
எம் காட்சிக்குள் வந்து நீ மறைகின்றாய்
உன் நாமம் எந்நாளும் எம்நாவில் ஒலிக்குதடா
எம் கன்னத்தில் கண்ணீர் கரைபுரண்டு ஓடுதடா
ஓரிரண்டு திங்களிலே மறைந்த றூபன் - நீ

27 – 12 - 95 புதன்கிழமை [இன்று] அன்னாரின் அந்தியேட்டிக் கிரியைகளிலும் மதிய போசனத்திலும் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் கலந்து கொண்டு அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும்படி கேட்டுக் கொள்கிறோம்.

குடும்பத்தினர்

சிவன் கோயில் வீதி,
எழுதுமட்டுவாழ்.

(39677)


ராசி சில்க்ஸ்

புதுவருட, தைப்பொங்கல் மலிவு விற்பனை

| | பழைய விலை | தற்போதைய விலை |
|---|---|---|
| மாட்டின் சேட் | 400/- | 350/- |
| கசின் சேட் | 435/- | 360/- |
| ரேக் சேட் | 700/- | 600/- |
| யான் சேட் | 750/- | 650/- |
| மைக்கிரோ பூனம் சாரி | 600/- | 400/- |
| வெல்வைற் பூனம் சாரி | 675/- | 525/- |
| சிக்கிபோ (Sikkiboo) | 900/- | 650/- |
| பட்டபிளை சாரி | 850/- | 675/- |
| போச்சமல்லி | 1050/- | 850/- |
| சரிதா சாரி | 1000/- | 800/- |
| காஞ்சி கொட்டன் சாரி | 1250/- | 900/- |
| தாரிகா சில்க் | 1100/- | 850/- |

| | பழைய விலை | தற்போதைய விலை |
|---|---|---|
| மைசூர் சில்க் | 1400/- | 1250/- |
| ரெம்பிள் சில்க் | 1750/- | 1550/- |
| றிபில் போடர் சில்க் | 2250/- | 1950/- |
| காஞ்சிபுரம் (றிபில் போடர்) | 2500/- | 1900/- |
| காஞ்சிபுரம் (பாட்லி) | 1850/- | 1500/- |
| செந்தூரப்பூவே பனாறிஸ் | 2400/- | 2100/- |
| றிம்சிம் பனாறிஸ் | 3400/- | 2950/- |
| பாட்லி பனாறிஸ் | 4750/- | 4250/- |
| ரெயின்போ பனாறிஸ் | 5500/- | 4500/- |
| கூறை சாரிகள் | 6000/- | 4750/- |
| பிலீட் கொடி கூறை சாறி (பாட்லி) | 6500/- | 5500/- |
| சில்வர், கோல்ட்ஸ் பனாறிஸ் | 6500/- | 5750/- |

ஸ்கேட்ஸ் & பிளவ்ஸ், சூட் இன்னும் பல.

ராசி சில்க்ஸ்
பிரதான வீதி,
மகாத்மா திரையரங்கு முன்பாக
நெல்லியடி.

(சி-2918)

ராசி சில்க்ஸ்
கண்டி வீதி,
புகையிரத நிலைய முன்பாக
கொடிகாமம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

## வரலாற்றை புரட்டினால்....

அடக்கப்பட்ட தமிழ் தேசியவாதத்தின் எல்லை மீறிய மனவெறுப்பின் வெளிப்பாடே தமிழீழ விடுதலைப் புலிகள் – என நவசமசமாஜக் கட்சியின் பொதுச் செயலாளர் விக்கிரமபாகு கருணாரத்ன கொழும்பு ஆங்கில வார இதழ் ஒன்றுக்கு அளித்த விசேட பேட்டியில் தெரிவித்துள்ளார்.

தெற்கில் யுத்தத்துக்கு ஆதரவான பேரினவாதிகளின் கை ஓங்கியுள்ள இந்த நேரத்தில்—

விடுதலைப் புலிகளை ராணுவ ரீதியில் முற்றாகத் தோற்கடித்த பின்னரே அரசியல் தீர்வு யோசனைகள் அறிவிக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கை தெற்கில் வலுப்பெற்று வரும் இந்தக் காலத்தில் — விக்கிரமபாகு கருணாரத்ன, வாசுதேவ நாணயக்கார ஆகியோரின் குரல்கள் இன்னும் ஒலிக்கத்தான் செய்கின்றன. வகுப்புவாதத்துக்குள் மூழ்கிக் கொண்டிருக்கும் சிங்கள தேசத்தை இவர்களின் குரல்கள் சிந்திக்க வைக்கவேண்டும்.

ஐக்கிய தேசியக் கட்சியின் ஆட்சிக்கால இறுதியில், அப்போது ஜனாதிபதியாக இருந்த டி. பி. விஜேதுங்கா, விடுதலைப் புலிகள் இயக்கத்தை ஒரு பயங்கரவாதிகள் இயக்கம் என்றார். தமிழர்களுக்கு பிரச்சினை எதுவுமே இல்லை என்றும் அவர் கூறினார்.

இதன் பின்னர் ஆட்சிக்கு வந்த சந்திரிகா குமாரதுங்கா தமிழர்களுக்கு அரசியல்பிரச்சினைகள் இருப்பதை ஒப்புக்கொண்டார். ஆனால் சொற்ப சலுகைகளை மட்டும் கொடுத்து தமிழர்களை அவர் ஏமாற்ற முயன்றார்.

தற்போது எதிர்வரும் தமிழ் — சிங்கள புத்தாண்டுக்கு முன்னர் விடுதலைப் புலிகளை ஒழித்துக்கட்டி விடலாம் என்று சந்திரிகா நினைத்துக் கொண்டிருக்கிறார்.

படையினர் யாழ்ப்பாணத்தில் ஈட்டிய "வெற்றி"யை காரணமாகக் காட்டி யுத்தத்துக்கு ஆதரவான சக்திகளின் குரல் தெற்கில் பலமாக ஒலித்து வருகிறது. நியாய சிந்தை உள்ளவர்களின் குரல்கள் அடக்கப்பட்டு வருகின்றன.

இப்படியான நிலையிலேயே சிங்களப் படைகளால் விடுதலைப் புலிகளைத் தோற்கடிக்க முடியாது என்றும்—

அடக்கப்பட்ட தமிழ்தேசியவாதத்தின் எல்லை மீறிய மனவெறுப்பின் வெளிப்பாடே தமிழீழ விடுதலைப் புலிகள் என்றும்—

இந்த ராணுவ நடவடிக்கை ஒவ்வொரு தமிழனதும் இதயத்தையும் ஆத்மாவையும் காயப்படுத்துவதை மட்டுமே செய்யும் என்றும் — விக்கிரமபாகு கருணாரத்தின கூறியுள்ளார்.

ஆண்டாண்டு காலமாக தமிழன் அடக்கப்பட்டு வந்ததினாலேயே விடுதலைப் புலிகள் தோன்றினார்கள் என்ற உண்மையை சிங்கள தேசம் இன்னமும் உணரத் தவறிவிட்டது.

விடுதலைப் புலிகள் கழுத்தில் சயனைட்டைக் கட்டிக் கொண்டு ஏன் போராடுகிறார்கள் என்பதையே சிந்தித்துக் கிரகித்துக்கொள்ள முடியாதவாறு பேரினவாதம் இன்று முழு சிங்கள தேசத்தையும் ஆட்கொண்டுள்ளது.

விடுதலைப் புலிகளை ஏன் தோற்கடிக்கமுடியாது என்பதை ஈழத் தமிழர்களின் கடந்தகால துயர்மிக்க அரசியல் வரலாற்றைப் புரட்டிப் பார்த்தால் புரிந்துவிடும்.

# மரக்கறித் தட்டுப்பாட்டை நீக்க அவசரத் திட்டம்

## பருத்தித்துறையில் நேற்று கூட்டம்

சாவகச்சேரி, டிச. 27

அவசர விவசாயத் திட்டம் தொடர்பான விளக்கக் கூட்டம் நேற்று பருத்தித்துறையில் நடைபெற்றது.

யாழ். அரச அதிபர் திரு. செ. பத்மநாதன் தலைமையில் பருத்தித்துறை பிரதேச செயலர் அலுவலகத்தில் நடந்த இக்கூட்டத்தில் இத்திட்டத்தின் நோக்கம் குறித்தும், தேவைகள் குறித்தும் கலந்தாலோசிக்கப்பட்டது.

அரச அதிகாரிகளும், அரச சார்பற்ற அமைப்புப் பிரதிநிதிகளும், சமூக நிறுவன பிரதிநிதிகளும் கூட்டத்தில் பங்குபற்றினர்.

இதற்குத் தேவையான மரக்கறி விதைகளை வழங்கவும் —

மண்ணெண்ணெய் வழங்கவும்— ஏற்பாடு செய்வதாக அரச அதிபர் கூறினார்.

வடமராட்சிப் பகுதியில் பெரிய அளவில் இத்திட்டத்தை மேற்கொள்ள நடவடிக்கை எடுப்பதென முடிவாகியது.

குடாநாட்டுக்கு தேவையான 20 ஆயிரம் மெற்றிக் தொன் மரக்கறி வகைகளை வலிகாமம் வழங்கியதாகவும்—

அந்த தொகையை ஈடுசெய்யும் வகையில் உற்பத்தியை மேற்கொள்ள வேண்டும் என்றும் — கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது. (இ-3)

## நிவாரணம் சேகரிக்க அனுமதி மறுப்பு

மட்டக்களப்பு, டிச. 27

யாழ். மாவட்டத்தில் இடம் பெயர்ந்தவர்களுக்கு உதவும் வகையில் மட்டக்களப்பில் நிவாரணப் பொருள்களை சேகரிக்க படையினர் அனுமதி மறுத்துள்ளனர் என

(6 ஆம் பக்கம் பார்க்க)

# புதிய அதிபர் சேவைக்கு விவரம் திரட்டுதல்

சாவகச்சேரி, டிச. 27

தற்போது அதிபர் சேவையில் உள்ளவர்களை புதிய அதிபர் சேவையினுள் உள்வாங்கும் நடவடிக்கைகளை மேற்கொள்ளும் பொருட்டு, அதிபர்கள் தமது சுயவிவரங்களை அனுப்பி வைப்பதற்கான இறுதித் திகதி இம்மாதம் 22 ஆம் திகதி ஆகும்.

ஆனால் கல்வி, உயர்கல்வி அமைச்சின் செயலாளர் எம். டீ. டீ. பீரிஸின் இது தொடர்பான விளம்பர அறிவித்தல் வடக்கு - கிழக்குப் பகுதிகளில் உரிய நேரத்தில் கிடைக்கவில்லை என்று தெரிவிக்கப்படுகிறது.

முடிவு திகதி 15 - 1 – 1995 ஆம் திகதிக்கு பிற்போடுமாறு இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் கோரிக்கை விடுத்திருப்பதாகவும் —

அதனை கல்வி அமைச்சு ஏற்றுக்கொள்ளும் என்று தாம் எதிர்பார்ப்பதாகவும் — இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கப் பொதுச் செயலாளர் திரு. த. மகாசிவம் தெரிவித்துள்ளார்.

தற்போது அதிபர் சேவையிலுள்ளவர்கள் தமது சுயவிவரத்தை அனுப்ப வேண்டிய விண்ணப்பப்படிவத்தை தமிழர் ஆசிரியர் சங்கத்தின் தற்காலிக பணிமனையில் (ச. நடேசபிள்ளை, பாபு கோணேச வீதி, நுணாவில் மேற்கு, சாவகச்சேரி) நாளை வியாழக்கிழமை பெற்று நேரடியாகவே அமைச்சுக்கு அனுப்பி வைக்கலாம்திணைக்களம் ஊடாக அனுப்பி வைக்க வேண்டியதில்லை என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ)

# கலவரங்களைக் கண்டு யாழ்ப்பாணம் ஓடக்கூடாது

## தொண்டமான் கூறுகிறார்

கொழும்பு, டிச. 27

ஒருஇடத்தில் கலவரம் நடந்தால் தமிழர்கள் யாழ்ப்பாணம் ஓடிவிடுகிறார்கள். இப்படி ஓடுவதால் எம்முடைய பலத்தை நாமே இழக்கின்றோம். இந்த நாட்டில் எமது மக்களுக்கும் சம உரிமை உண்டு எந்தப் பிரச்சினை ஏற்பட்டாலும், நாம் இந்த இடத்திலேயே இருக்க வேண்டும்.

நுவரெலியாவில் நடந்த தமிழ் சாகித்திய விழாவில் பேசுகையில் அமைச்சர் தொண்டமான் மேற்கண்டவாறு தெரிவித்தார். (இ-3)

# கிளினிக்குகள் திங்கள் முதல் முழுமையாக இயங்கும்

மந்திகை, டிச. 27

மந்திகையில் இயங்கும் யாழ். போதனா வைத்தியசாலையின் கிளினிக்குகள் யாவும் எதிர்வரும் முதலாம் திகதி திங்கட்கிழமை தொடக்கம் முழுமையாக இயங்கவுள்ளதாக வைத்தியசாலை நிர்வாகத்தால் அறிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய வாரத்தில் திங்கட்கிழமை கண் கிளினிக் மந்திகை ஆதார வைத்தியசாலையிலும் —

குழந்தைகளுக்கான கிளினிக் மற்றும் காது, மூக்கு, தொண்டைக்கான கிளினிக்குகள் புலோலி மெதடிஸ்த மிஷன் பாடசாலையிலும் நடைபெறும்.

செவ்வாய்க்கிழமை கண் கிளினிக் மந்திகை ஆதார வைத்தியசாலையிலும், சரும ரோகக் கிளினிக் புலோலி பாடசாலையிலும் நடைபெறும்.

புதன்கிழமை காது, மூக்கு, தொண்டை கிளினிக், சத்திர சிகிச்சைக் கிளினிக் ஆகியவை புலோலி பாடசாலையில் நடைபெறும்.

வியாழன் மருத்துவக் கிளினிக் புலோலி பாடசாலையில் நடைபெறும்.

வெள்ளிக்கிழமை காது, மூக்கு, தொண்டைக் கிளினிக், கர்ப்பிணிகளுக்கான கிளினிக், புலோலி பாடசாலையிலும் கண் கிளினிக் மந்திகை ஆஸ்பத்திரியிலும் நடைபெறும்.

சனிக்கிழமை நீரிழிவுக் கிளினிக், காது, மூக்கு, தொண்டை கிளினிக் புலோலி பாடசாலையில் நடைபெறும்.

மேலும் சனிக்கிழமையில் காது, மூக்கு, தொண்டை, சருமரோக கிளினிக்குகள் மாணவர்களுக்கு மாத்திரமே நடைபெறும்.

ஞாயிறு மற்றும் பொது விடுமுறை தினங்களில் கிளினிக்குகள் நடைபெறமாட்டா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வைப்பகத்துக்கு வருமாறு அழைக்கப்பட்டுள்ளோர்

சாவகச்சேரி, டிச. 27

கீழ்க்குறிப்பிடப்படுவோரை கச்சாய் வீதி, சாவகச்சேரியில் அமைந்துள்ள தமிழீழ வைப்பகத்திற்கு நாளை வியாழக்கிழமை காலை 10 00 மணிக்கு அடையாள ஆவணங்களுடன் வருகை தருமாறு நிதித்துறை அறிவித்துள்ளது.

★ ராசா வேலாயுதபிள்ளை — மஞ்சத்தடி ஒழுங்கை, இணுவில்.

★ கணபதி கிருஸ்ணர் — கலைவாணி வீதி, சித்தன்கேணி.

★ ஆறுமுகம் பூமணி — சித்தங்கேணி.

★ ஆறுமுகம் கமலா — சாந்தி தியேட்டரடி, சங்கத்தானை.

★ திருமதி அல்பிறெற்அம்மா யோகராசா (சித்திரா) — ஆர்த்தியோலை, பெரியவிளான், இளவாலை

★ பிறைசூடி சிவசுந்தரம் — புத்தூர் மேற்கு, புத்தூர்.

★ திருமதி இராசநாயகம் மகாலெட்சுமி—சோமசுந்தரம் வீதி, ஆனைக்கோட்டை.

★ திருமதி பொன்னுத்துரை இராசம்மா—காளி கோவில் வீதி, மாசியப்பிட்டி, சண்டிலிப்பாய்.

★ நாகமணி ராஜரட்ணம் –91/1, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.

★ திரேசம்மா யேசுதாசன் — 33 அல்லது 75 கதீற்றல் வீதி, யாழ்ப்பாணம்.

★ கந்தையா செல்லையா அல்லது செல்லையா ஜெயந்தி — ஆறுகால்மடம், பழம்றோட், ஆனைக் கோட்டை.

★ பாலன் செல்வநாயகி — நவக்கிரி, புத்தூர்.

★ பி. சண்முகலிங்கம் — 44, இலந்தைக்குளம் றோட், அரியாலை.

★ கந்தையா சுந்தரம் –இல 5, பென்டிக்கோஸ் லேன், கண்டி வீதி, யாழ்ப்பாணம்.

★ சி. தம்பிராசா — கொட்டுக் கிணற்று பிள்ளையார் கோவிலடி, அரியாலை.

★ கே. விநாயகமூர்த்தி — 527, பலாலி வீதி, திருநெல்வேலி தெற்கு, யாழ்ப்பாணம்.

★ திருமதி நவமணி தெய்வேந்திரம்— அளவெட்டி தெற்கு, அளவெட்டி.

★ செல்வராசா நேசம்மா — 4ஆம் வட்டாரம், மண்டைதீவு.

★ கந்தையா துரைராசா — 81. பத்திரகாளி கோவிலடி, வண். மேற்கு, யாழ்ப்பாணம்.

★ நல்லையா தவம் — ஜெயந்தி மில், பிரதான வீதி, சுழிபுரம்.

★ தம்பிப்பிள்ளை ராஜதுரை — சங்குவேலி தெற்கு, மானிப்பாய்.

★ செல்லமுத்து தங்கராசா நாகம்மா — முருகமூர்த்தி கோவில் வீதி, சங்கானை கிழக்கு, பண்டத்தரிப்பு.

★ காத்திகேசு இராமச்சந்திரன் — சில்லாலை, பண்டத்தரிப்பு, சாந்தை.

★ திருமதி ஜப்பான் சம்மாட்டி — 40, பாக் றோட், குருநகர், யாழ்ப்பாணம்.

★ சண்முகம் வசந்தா — மே/பா. வே. பரமகுரு, எம்.எஸ். ஒழுங்கை, கோண்டாவில் கிழக்கு, கோண்டாவில்.

★ சிவசுப்பிரமணியம் சரஸ்வதி — வீ. ஐ. ஐ. ஒழுங்கை, இருபாலை, கோப்பாய்.

★ சின்னத்தம்பி கனகசபை — 189, செண். பெனடிட் வீதி, நல்லூர் கிழக்கு, யாழ்ப்பாணம்.

★ திருமதி மலர் புஸ்பராஜன்—அராலி வடக்கு, வட்டுக்கோட்டை.

★ திரு. திருமதி பூபாலசிங்கம் யோகம்மா — வீரமனை, குப்பிளான், ஏழாலை.

★ திருமதி நாகேஸ்வரி மார்க்கண்டு அல்லது திருமதி ஜெகதாம்பிகை மார்க்கண்டு — நிச்சாமம், சங்கானை.

★ செல்லையா ரத்தினராசா — புதுசிவன் கோவில் வீதி, சங்கானை.

★ கணபதி தங்கராசா — புதுசிவன் கோவில் வீதி, சங்கானை.

★ வல்லிபுரம் அழகராஜா — அராலி வீதி, சங்கானை.

★ விமலாதேவி இராசதுரை — அராலி வீதி, சங்கானை.

★ சின்னத்தம்பி தேவராஜா — உரும்பராய் வடக்கு, உரும்பிராய்.

★ வன்னியசிங்கம் நாகம்மா அல்லது சசி — மணற்புலம், அளவெட்டி.

★ திருமதி சுசீலா கௌரிசங்கர் — சிவஞானப் பிள்ளையார் கோவிலடி, உடுவில், சுன்னாகம்.

★ பரமேஸ்வரி நவரத்தினராசா — மடத்தடி வீதி, சிறுப்பிட்டி வடக்கு, நீர்வேலி.

★ சின்னத்துரை கார்த்திகேசு — சுதுமலை தெற்கு, மானிப்பாய்.

★ வல்லிபுரம் ஜெயலட்சுமி அல்லது இராசதுரை ஜெயலட்சுமி — கல்லாரை, மல்லாகம்.

★ பொன்னம்மா வெள்ளையன் — வன்னியசிங்கம் வீதி, ஆவரங்கால், புத்தூர்.

★ கணேசு சோதிப்பிள்ளை — பாரதி வீதி, கோண்டாவில் மேற்கு, கோண்டாவில்,

★ பொன்னு கந்தசாமி — பாரதிவீதி, கோண்டாவில் மேற்கு, கோண்டாவில்.

★ சின்னராசா அந்தோனியாப்பிள்ளை — கடற்கரை வீதி, ஈச்சம்மோட்டை, யாழ்ப்பாணம்.

★ சிவலை சிவசம்பு — பாரதி வீதி, கோண்டாவில் மேற்கு, கோண்டாவில்.

★ தங்கராணி சண்முகநாதன் — ஏழாலை மத்தி, ஏழாலை.

★ நடராஜா நவநீதன்(நிசான்பஸ் உரிமையாளர்) சுழிபுரம் மத்தி, சுழிபுரம்.

★ நாகர் காசிப்பிள்ளை (நிசான் பஸ் உரிமையாவர்) — மூளாய் தெற்கு, சுழிபுரம்.

(6ஆம் பக்கம் பார்க்க)

## வைப்பகத்துக்கு...

(5 ஆம் பக்கத் தொடர்ச்சி)

★ ஞானேஸ்வரி சண்முகநாதன் (நிசான் பஸ் உரிமையாளர்) — சரவணை கிழக்கு, வேலணை.

★ தவசி பிள்ளையார் — மூதலாவது ஒழுங்கை, அரசடி, நல்லூர்.

★ செல்லப்பா ந ராஜா (ஓய்வு பெற்ற ஆசிரியர்) — இலகடி ஒழுங்கை, கோப்பாய் வடக்கு, கோப்பாய்.

★ தவமலர் சிவகுரு — கற்பகப் பிள்ளையார் கோவிலடி, உடுவில் கிழக்கு, சுன்னாகம்.

★ கங்கரப்பிள்ளை சின்னத்தம்பி — செல்வம் கோட்டம், சிறுப்பிட்டி தெற்கு, நீர்வேலி.

★ பெரியதம்பி தம்பிராசா — காளிகோவிலடி, பத்தைமேனி, அச்சுவேலி.

★ முடியப்பு பிலிப்பினேஸ் — 17, முதலாம் குறுக்குத்தெரு, றெக்ளமேசன், குருநகர்.

★ செல்லையா பத்மநாதன் — வங்கியடி, இணுவில் கிழக்கு, இணுவில.

★ திரு. திருமதி சின்னத்தம்பி மயில்வாகனம் — கொக்குவில் வீதி, உயரப்புலம், ஆனைக்கோட்டை.

★ முத்தையா முத்துசாமி — விழிசிட்டி, ஏழாலை தெற்கு, ஏழாலை அல்லது சண்முகராஜன் மே/ப கச்சாய் வீதி, மரியதாஸ் வீதி, சாவகச்சேரி.

★ பராசக்தி ராஜேந்திரம் — 'ராஜ்மகால்' கோப்பாய் வீதி, உரும்பிராய் கிழக்கு. மே. பா. தவமணி சிவசுப்பிரமணியம் சரசாலை வடக்கு, சரசாலை

(ஐ)

## அறிவித்தல்

### குடி தண்ணீர் விநியோகம்

குடி தண்ணீர் விநியோகம் சம்பந்தமாக ஒரு கலந்துரையாடல் கொடிகாமம், கச்சாய் வீதியில் உள்ள தமிழீழ நிர்வாக சேவையின் வேலைப் பகுதி காரியாலயத்தில் 29-12-95 வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு நடைபெறும். இதில் நீர்வளசபை, சேசிய நீர் வழங்கல் வடிகால் அமைப்பு சபை, மற்றும் உள்ளூராட்சி மன்றங்களின் நீர் விநியோகத்தில் ஈடுபடுவோருடன், ஏனைய ஆர்வமுள்ள பொறியியலாளர்கள், தொழில் நுட்பவியலாளர்களையும் பங்குபற்றுமாறு தமிழீழ நிர்வாக சேவைப் பொறுப்பாளர் கேட்டுள்ளார். மேலும் குழாய்க் கிணறு கையாலும், இயந்திர மூலமும் அமைக்கும் வேலையில் அனுபவமுடையவர்களை உடனடியாக வேலையில் ஈடுபடுவதற்காக 29-12-95 க்கு முன்னர் தங்களுடன் தொடர்பு கொள்ளுமாறும் பொறுப்பாளர் தெரிவித்துள்ளார்.

(சி-3092)

## தசாகக்கிருகயக்ஞ அழைப்பு

### இராசலெட்சுமி அம்மா

21- 12- 95 வியாழக்கிழமை சிவபதம் அடைந்த அளவெட்டி கும்பிளாவளை பிள்ளையார் கோவிலைச் சேர்ந்த ஞானசேகர ஐயர் அவர்களின் பாரியார் ஆகிய இராசலெட்சுமி அம்மா அவர்களின் ஆத்மசாந்திக் கிரியைகள் பின்வரும் திகதிகளில் நடை பெறும்.

30- 12- 95 சனிக்கிழமை தாசகம் (கல் எடுப்பு)
31- 12- 95 ஞாயிற்றுக்கிழமை ஏகோதிஷ்டம் மாசிகம்
1- 01- 96 திங்கள் சபிண்டீகரணம்
2- 01- 96 செவ்வாய் கிருகயக்ஞம்

மேற்படி கிரியைகளில் உறவினர்கள், உற்றார், நண்பர்கள் கலந்து கொள்ளும் படி கேட்டுக் கொள்ளுகிறோம்.

தகவல்:
இ. சோமசுந்தரேஸ்வரக் குருக்கள்
(சுப்பையாக் குருக்கள்)
[கும்பிளாவளை, அளவெட்டி]

தற்போதைய முகவரி:-
சின்னத்தாய் பிள்ளையார் கோவில்,
புலோலி தெற்கு, புலோலி.

(39698)

## 31 ஆம் நாள் நினைவு அஞ்சலி

எமது கல்லூரியின் பகுதித் தலைவராகக் கடமையாற்றும்

திரு வெற்றிவேற்பிள்ளை ஏகாம்பரநாதன்
அவர்களின் தாயார்

திருமதி
### ருக்மணி வெற்றிவேற்பிள்ளை

(முன்னாள் தலைமை ஆசிரியை யா/இராமநாதன் கல்லூரி ஆரம்ப பாடசாலை)

அவர்களின் மறைவு குறித்து எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவிப்பதோடு அவருடைய ஆத்மா சாந்தியடையவும் பிரார்த்திக்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள்
யா/இராமநாதன் கல்லூரி சுன்னாகம்

(சி/3085)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்பிளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட்டினரால் சாவகச்சேரி, சரசாலை தெற்கில் உள்ள அவர்களது தற்காலிகப் பணிமனையில் 27-12-95 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

## கறுப்பு உடையினர் சோதனை

திருகோணமலையில் கறுப்பு உடை அணிந்த கும்பல் ஒன்று தமிழ் மக்களின் வதிவிடங்களைச் சோதனையிட்டு வருகிறது.

கடந்த வியாழன் திருகோணமலை மடத்தடியில் கறுப்பு உடை அணிந்தோர் தேடுதல் மற்றும் சோதனை நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

இந்த தேடுதலின் போது மக்கள் அனைவரும் மாரியம்மன் கோவிலுக்கு கொண்டு செல்லப்பட்டு முகமூடி அணிந்தோரினால் அடையாளம் காணப்பட்டனர். (இ-3)

## உலர் உணவு விநியோகம் இன்று ஆரம்பம்

சாவகச்சேரி, டிச. 26

வலி. வடக்கு, தீவுப்பகுதிகளில் இருந்து இடம் பெயர்ந்தவர்களுக்கான 6 வார உலர் உணவு நிவாரணம் இன்று முதல் வழங்கப்படவிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது

இந்த விநியோகத்துக்கு தேவையான பொருள்கள் ப. நோ. கூ. சங்கங்களுக்கு வழங்கப்பட்டு வருகின்றன.

அரிசி, மா, சீனி, பருப்பு, பால்மா ஆகியன நிவாரணமாக வழங்கப்படும்.

(இ-3)

## கல்விக் கழக ஆசிரியருக்கான உதவித்தொகை

கல்விக் கழக ஆசிரியர்களுக்கான ஒக்ரோபர் மாத உதவி தொகைக் கொடுப்பனவுகள் இன்று புதன் கிழமை பின்வரும் அட்டவணைப்படி சாவகச்சேரி இந்துக்கல்லூரி விஞ்ஞான கூடத்தில் வழங்கப்படுமெனவும் —

தென்மராட்சி, பருத்தித்துறை, கரவெட்டி, மருதங்கேணி கோட்ட கழக ஆசிரியர்கள் மேற்படி கொடுப்பனவுகளை தத்தமது கல்விக் கோட்டங்களில் வழமை போன்றுபெற்றுக்கொள்ளலாமெனவும் — கல்விக் கழகப் பொறுப்பாளர் அறிவித்துள்ளார்.

யாழ்ப்பாணம், நல்லூர், உடுவில், சங்கானை கோட்ட கல்விக்கழக ஆசிரியர்களுக்கான கொடுப்பனவுகள் இன்று முற்பகல் 9.00 மணிக்கும். —

சண்டிலிப்பாய், தெல்லிப்பளை, கோப்பாய், வேலணை கோட்ட கல்விக்கழக ஆசிரியர்களுக்கான கொடுப்பனவுகள் இன்று பிற்பகல் 1 மணிக்கும் வழங்கப்படும். (இ)

### திட்டமிட்ட...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

வதா? என்பது குறித்து தற்போது பிரச்சினை ஏற்பட்டிருப்பதாகவும்

இப்பிரச்சினைக்குத் தீர்வு ஏற்படும் பட்சத்திலேயே இச்சேவை நடைபெறும் என்றும் — தெரிவிக்கப்படுகிறது.

(இ-3)

### நிவாரணம்...

(5 ஆம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவிக்கப்பட்டது.

யாழ். மக்களுக்கு நிவாரணப் பொருள்களைசேகரித்து வழங்குவதென மட்டக்களப்பு மாநகரசபை தீர்மானம் நிறை வேற்றியிருந்தது.

இந்த பணிக்கான அனுமதியை பாதுகாப்பு அதிகாரிகள் தர மறுத்து விட்டனர் என்றும் —

இதனால் அந்தப்பணி நிறுத்தப்பட்டுள்ளதாகவும் — [illegible] முதல்வர் தெரிவித்தார்.

(இ-3)

# மரண அறிவித்தல்கள்

## திருமதி நல்லதம்பி பாக்கியம்

சங்குவேலியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி நல்லதம்பி பாக்கியம் காலமானார்.

இவர் காலஞ் சென்ற காசியர் நல்லதம்பியின் அன்பு மனைவியும், காலம் சென்ற சரவணமுத்து சின்னம்மா தம்பதியரின் அன்பு மகளும், காலஞ் சென்ற அம்பிகை மற்றும் தணிகாசலம், யூகபாணி காலம் சென்ற திருமதி யூகவதி ஆகியோரின் சகோதரியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (27.12.95) புதன்கிழமை பிற்பகல் ஒரு மணியளவில் அன்னாரின் தற்காலிக கொடிகாம இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் வேவில் மயானத்துக்கு தகனக் கிரியைகளுக்காக எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
ச. யூகபாணி

தற்காலிக முகவரி:
மே. பா. V. இராசரத்தினம்
எருவன் (சேரன் களஞ்சிய வடக்கு ஒழுங்கை),
பருத்தித்துறை வீதி,
கொடிகாமம். (39709)

அருட்சகோதரி
## மேரி அடலா றொட்றிகஸ்

யாழ்ப்பாணம் திருக்குடும்பக் கன்னியர் சபையைச் சேர்ந்தவரும் புத்தளத்தைப் பிறப்பிடமாகக் கொண்டவருமான அருட்சகோதரி மேரி அடலா றொட்றிகஸ் அவர்கள் 24-12-95 அன்று இறைவனடி சேர்ந்துள்ளார்.

இவர் அருட் சகோதரி மேரி மெலானியின் அன்புச் சகோதரியுமாவர்.

அன்னாரின் இறுதிச்சடங்கு 26-12-95 காலை நம்பைக்குளம், வவுனியாவில் நடைபெற்றது. இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
மாகாணத் தலைவி,
திருக்குடும்பக் கன்னியர் மடம்,
மிருசுவில்,

(39697)

## டானியல் அந்தோனிப்பிள்ளை

[ஓய்வுபெற்ற தொழில் நுட்ப உத்தியோகத்தர்]

பாஷையூரைச் சேர்ந்த டானியல் அந்தோனிப்பிள்ளை 25 - 12 - 95 இல் இறைவனடி சேர்ந்து விட்டார்.

அன்னார் பிலோமினா அந்தோனிப்பிள்ளையின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற மிக்கேல் டானியல்-விக்ரோறியா ஆகியோரின் சிரேஷ்ட புதல்வனும், திருமதி அன்னம்மா பாலசிங்கத்தின் அன்புச் சகோதரனும், திருமதி விக்ரோறியா [ஜொய்சி] பேர்டினன், லலிதா வின்சன்ட் அன்ரனி, மைக்கல் ராஜ்குமார், மேவின் ஜெயக்குமார், ஜோசவ்பின் ஐடா, ஜெசி ஆகியோரின் பாசமிகு தந்தையும், லடிஸ்லாஸ் பேர்டினன்ட், பாவிலுப்பிள்ளை அன்ரனி, மேரி அனற், அனற் ஆகியோரின் மாமனாரும், றஜித், றொய்சன், ஜோய்லன்ட், மேனகா, மேளின், அஜித், அலன், மேபிள், லக்ஷனன் ஆகியோரின் அருமை பேரனும், திருமதி திரேசம்மா சிவபாலனின் மைத்துனரும், சிந்துஜாவின் பெரிய தகப்பனுமாவார்.

இவரது பூதவுடல் இன்று [27 - 12 - 95] புதன் கிழமை பிற்பகல் 3.30 மணியளவில் பருத்தித்துறை கடற்கரை வீதியிலுள்ள ''அனற் அகத்''திலிருந்து, பருத்தித்துறை சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்படும். இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல்:
ராஜ்குமார் அன்ரனிப்பிள்ளை
[மகன்]

''அனற் அகம்''
கடற்கரை வீதி,
பருத்தித்துறை. [39599]

## செல்லையா காசிப்பிள்ளை

(காசிப்பிள்ளை அன்கோ புடைவைக்கடை முன்னாள் உரிமையாளர்)

கொக்குவில் கிழக்கைச் சேர்ந்த செல்லையா காசிப்பிள்ளை 26- 12- 95 (நேற்று) காலமானார்.

அன்னார் அமரர் சரஸ்வதியின் அன்புக்கணவரும், இராமகிருஷ்ணன், இராமச்சந்திரன் (ஜேர்மனி), பாலகிருஷ்ணன் (கனடா), கிருஷ்ணவேணி, கிருஷ்ணகுமாரி, கிருஷ்ணபதி, கிருஷ்ணலீலா, கிருஷ்ணராகினி, ஆகியோரின் அன்புத் தந்தையும், கு. சண்முகநாதன் (அதிபர் யாழ். கொட்டடி நமசிவாய வித்தியாலையம்) அருளானந்தம் (யாழ். மாநகரசபை), வரதராஜா (ஜேர்மனி), ஜெகதீசன் (கனடா), சோதிலிங்கம் (கனடா), திருமதி நாகேஸ்வரி, திருமதி சிவனேஸ்வரி, திருமதி சுசீலாதேவி ஆகியோரின் மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று 26- 12- 95 அல்லாரையில் நடைபெற்றன.

இவ்வறிவித்தலை உற்றார். உறவினர் யாவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
கு. சண்முகநாதன்

சீலன் வீதி,
அல்லாரை வடக்கு,
அல்லாரை. (39708)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org